**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 107/2023**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 25.07.2023**

| | |
|---|---|
| **Name : வினுப்பிரியா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1, 2, 3 present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குக்கல்பட்டியில் குடியிருந்து வருகிறேன். எதிரி கோவிந்தன் எனது கணவர் ஆவார். 2ம் எதிரி மற்றும் 3ம் எதிரி எனது மாமனார் மாமியார் ஆவார். நான் குக்கல்பட்டியில் எனது மாமனார், மாமியாருடன் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்துவருகிறோம். 11.11.2016-ம் தேதி எனக்கம் 1-ம் எதிரிக்கும் பூச்சூர் பெருமாள் கோவிலில் திருமணம் நடந்தது.

2) எனக்கும் 1-ம் எதிரிக்கும் 5 வயதில் ஒரு மகன் , 2 வயதில் ஒரு பெண் குழந்தையும் உள்ளார்கள். நாங்கள் இருவரும் ஒற்றுமையாக வாழ்ந்துவந்தோம். எனது கணவர் கோயம்புத்தூரில் ஐஜி ஆபிசில் வேலை செய்தார். அங்கே எனக்கு தெரியாமல் நித்யா என்ற பெண்மை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். 1-ம் எதிரிக்கும், நித்யா என்பவருக்கும் ஒரு ஆண் குழந்தை உள்ளது.

3) இந்த விவரம் எனது கணவரின் போனின் மூலம் தான் நான் தெரிந்துகொண்டேன். நான் இது குறித்து எனது கணவரிடம் போனில் கேட்டபோது, உனக்கு விருப்பம் இருந்தால் இருக்கலாம் இல்லை என்றால் உனது அம்மா வீட்டிகே என்று விடு என்று சொன்னார். எனது கணவர் இரண்டாவதாக திருமணம் செய்த பெண் அரசு வேலையில் இருந்ததால் எனது

கணவர் என்னை பிடிக்கவில்லை என்று சொன்னார். 17.10.2022–ம் தேதி நான் இது குறித்து மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் மனு அ.சா.ஆ.1** ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது நானும், எனது கணவரும் திருமணத்தின் போது எடுத்ததாகும் மற்றும் என்னிடம் காட்டப்படும் திருமண ரசீது திருமணத்தின் போது வழங்கப்பட்டதாகும். கடந்த 24.05.2021–ம் தேதி எனது மகள் தர்ஷா பிறப்பு குறித்து பிறப்பு சான்றிதழ் மற்றும் கடந்த 23.11.2017–ம் தேதி ஹரிஹரசுதன் பிறப்பு குறித்து பிறப்பு சான்றிதழ் இவை அனைத்தும் நகல்கள் என்பதால் குறியீடு செய்யப்படவில்லை. பிறகு போலிசார் என்னையும் நித்யா என்ற பெண்ணையும் அழைத்து விசாரித்தாகள்.

4) போலிசார் விசாரணையில் எனது கணவர் 2வது திருமணம் செய்தததும், அவருக்கு ஒரு குழந்தை உள்ளதும் தெரியவந்தது. அதன் பிறகு எனது கணவர் என்னுடன் வாழ்வதாக சொல்லி என்னை எனது வீட்டிற்கு வந்து அழைத்துவந்தார். 2ம் மனைவியுடன் வாழவில்லை என்று சொன்னார். போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 107/2023**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 25.07.2023**

| | |
|---|---|
| **Name : குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1, 2, 3 present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் குக்கல்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது தூரத்து உறவுமுறை ஆவார். எதிரிகளுக்கம், அ.சா.1 க்கும் என்ன பிரச்சனை என்பது எனக்கு தெரியாது. கடந்த 2022–ம் வருடம் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசர் **அ.சா.ஆ. 2** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் விசாரித்தனரா என்றால் இல்லை. நான் எங்கு வைத்து கையொப்பம் போட்டேன் என்றால் எங்கள் வீட்டின் பக்கத்தில் உள்ள சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். வரைபடத்தில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் மற்றும் எனது மகன் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.